Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 245/2021   Date:29.06.2026
Deposition of witness for prosecution: PW6 ( LW2 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | சம்பத் | Village | மேகமலை |
| Father/ Husband Name | தங்கம் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 40 /2026 | Calling | மின்வாரியம் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 29.06.2026. TIME 01.50 to 2.00 **PM**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை :–**

நான் சின்னமனூரில் குடியிருந்து மேகமலை தமிழ்நாடு மின்சார துறையில் பணிபுரிந்து வருகிறேன். நான் விபத்து சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்து நடந்ததாக கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 13.02.2021–ம் தேதி சுமார் மாலை 05.00 மணியளவில் மேகமலை சமுதாய கூடம் அருகே நான் எனது இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது, எதிர்திசையில் TN 60 AX 6374 என்ற பதிவெண் கொண்ட இருசக்கரவாகனத்தில் எதிரி வாகனத்தை ஓட்டி வர அவருடன் பின்னால் அமர்ந்து வந்த மற்றொரு நபரும் வந்தார்கள் என்றும், எதிரி தனது வாகனத்தை கவனக்குறைவாகவும், முரட்டு தனமாகவும் ஓட்டியதில் எதிரியின் வாகனத்தில் பின்னால் அமர்ந்திருந்த நபர் கீழே விழுந்ததில் பின்னந்தலையில் இரத்த காயம் ஏற்பட்டது என்றும், நான் சென்று பார்த்த போது இருவரும் மது போதையில் இருந்தார்கள் அவர்கள் மேல் மது வாடை இருந்தது என்றும், போலிசார் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.
Sd/P. kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 245/2021 Date:29.06.2026
Deposition of witness for prosecution: PW7 ( LW8 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | ரோகித் | Village | மேகமலை |
| Father/ Husband Name | தர்மர் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 23 /2026 | Calling | ஓட்டுநர் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 29.06.2026. TIME 2.00 **PM**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை :-**

1) நான் தற்போது மேகமலையில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காட்டபடும் பார்வை மகஜரிலுள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.3** ஆகும். கடந்த 13.02.2021 ம் தேதி மாலை 04.00 மணியளவில் மேகமலையில் உள்ள தமிழன் விடுதி அருகே போலிசார் விபத்து வழக்கு குறித்து, படம் வரைந்து, நேரில் வந்த விசாரணை செய்ததற்கு சாட்சியாக என்னிடமும், பிரபு என்பவரிடமும் கையொப்பம் வாங்கினார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

2) போலிசார் எத்தனை கையொப்பம் வாங்கினார்கள் என்றால் ஞாபகமில்லை. வழக்கு விபரம் பற்றி எண்கள் தெரியாது. விபத்த சம்பவ சமயத்தில் எனக்கு 17 வயது என்றால் சரியல்ல. போலிசார் என்னிடம் காவல்நிலையத்தில் கையொப்பம் வாங்கினார்கள் என்றாலும் சம்பவ இடத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. போலிசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பார்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.